# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



R.P (72)

பதிவு அஞ்சல் மூலம்

நகர் ஊரமைப்புத் துறை

அனுப்புநர்
திரு M. ஸ்ரீதர், B.E., M.Plan,
துணை இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
பெரம்பலூர் மாவட்டம்,
எண். 132–ஏ3, பெரியார் தெரு,
துறைமங்கலம்,பெரம்பலூர்.
email–ID: dtcppblr@gmail.com

பெறுநர்
ஊராட்சி மன்றத் தலைவர்,
வேப்பந்தட்டை ஊராட்சி மன்றம்,
வேப்பந்தட்டை ஊராட்சி ஒன்றியம்,
வேப்பந்தட்டை வட்டம்,
பெரம்பலூர் மாவட்டம்.

ந.க.எண்.344/2022–பெ.மா., நாள்.16.06.2022

அய்யா,

பொருள்: மனைப்பிரிவு – மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், பெரம்பலூர் மாவட்டம் – வேப்பந்தட்டை வட்டம்/ஊராட்சி ஒன்றியம் – வேப்பந்தட்டை ஊராட்சி/தெற்கு கிராமம் – ச.எண்.172/10ஏ–ல் 1.60 ஏக்கர் புஞ்சை நிலத்தில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு அனுமதி/இசைவு – ஒப்புதல் வழங்குதல் – குறித்து.

பார்வை:
1. மனுதாரர் திரு வெ. குழந்தைவேல், பெரம்பலூர் அவர்களின் கடிதம் நாள். 09.05.2022.
2. இவ்வலுவலக கடிதம் இதே எண். நாள்.27.05.2022 (சாலை அமைப்பு வரைபடம் இசைவு வழங்கப்பட்டது) மற்றும் நாள். 08.06.2022 (கட்டணங்கள் கேட்பு செய்யப்பட்டது)
3. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம், ந.க.எண். 19799/2020/போ, நாள். 24.12.2020.
4. தலைவர், வேப்பந்தட்டை ஊராட்சி அவர்களின் கடிதம் நாள்.02.06.2022. (ஒப்படைப்பு விபரம்)
5. மனுதாரர் திரு வெ. குழந்தைவேல், பெரம்பலூர் அவர்களின் கடிதம் நாள்.08.06.2022 (செலுத்துச் சீட்டு விபரம்)
6. அரசாணை எண்.138, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை (யு.டி.4.2), நாள். 04.06.2004.
7. அரசாணை எண்.79, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள். 04.05.2017.
8. அரசாணை எண். 18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். 04.02.2019 (ம) அரசாணை எண். 16, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை, நாள். 31.01.2020.

V. Kulanthaivel

9. அரசாணை எண். 141, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை (யுடி4(3)), நாள்.23.09.2020.
10. அரசாணை எண். 181, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை (யுடி4(1)), நாள். 09.12.2020.
11. அரசு கடிதம் எண். 19113/நவ4(3)/2017-1, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள். 30.08.2017.
12. நகர் ஊரமைப்பு ஆணையாளர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 13686/2017/எல்ஏ1, நாள். 08.09.2017.

-----

பார்வை 1-ல் சுட்டிய கடிதத்துடன் பெறப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவு இசைவுக்கான கோரிக்கை, பரிசீலிக்கப்பட்டு, பார்வை 2-ல் சுட்டிய இவ்வலுவலக கடிதம் நாள். 27.05.2022 மூலம் மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடம் இசைவு வழங்கப்பட்டது. பார்வை 4-ல் சுட்டிய 02.06.2022 நாளிட்ட கடிதம் மூலம் சாலை பொது ஒதுக்கீடு மற்றும் TANGEDCO பகுதியினை உள்ளாட்சியிடம் தானமாக ஒப்படைக்கப்பட்டு பெறப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து உத்தேச மனைப்பிரிவுக்கு கீழ்க்கண்ட ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

2) மனைப்பிரிவிற்கு இணைப்பில் உள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி ஒப்புதல் வழங்கப்படுகிறது. ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு ம.வ./ந.ஊ.து.இ.(பெ.மா.)எண்.10/2022 என எண்ணிடப்பட்டு 2 அசல் வரைபடங்கள் மற்றும் அசல் தானப்பத்திரம் மேல்நடவடிக்கைக்காக இத்துடன் அனுப்பிவைக்கப்படுகிறது.

3) மேலும், உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும்போது மனைப்பிரிவு நிபந்தனை எண்.9(ஆ)-ன்படி அவ்வாணையின் நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

4) உள்ளாட்சியின் ஒப்புதலுடன் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை சம்பந்தப்பட்ட பத்திரப்பதிவு அலுவலகத்திற்கும், நில அளவைத் துறைக்கும், தகவலுக்கும் உரிய நடவடிக்கைக்கும் அனுப்புமாறு தெரிவிக்கப்படுகிறது.

5) செயலாணைக் கடிதம், மனைப்பிரிவு நிபந்தனைகள் மற்றும் வரைபடங்கள் பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புகைச்சான்றினை உடன் அனுப்பிவைக்குமாறும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

சிறப்பு நிபந்தனை:

1. (a) பார்வை 10-ல் கண்ட அரசாணை மற்றும் பார்வை 8-ல் கண்ட TNCBR-2019 விதி எண்.47 (11)-ன்படியும் மாநகராட்சி/நகராட்சி பகுதி எனில் "Collecting the necessary fees including the charges for providing amenities like roads, storm water drains and street lights from the applicants." After collecting the necessary fees the final layout sketch, permit of planning authority along with approval of Local Body shall be issued to the applicant(s) directly.

V. Kulanthaivel

(b) மாநகராட்சி/நகராட்சி அல்லாத பகுதிகளில் "Shall collect the necessary fees and issue the final layout sketch, permit of planning authority along with the permit of local body to the applicant(s) directly, only after ensuring that the applicant lays tar roads, provide other amenities like storm water drains, water supply facilities by constructing required OHT, provide necessary street lights etc., as per the standards specified by the Local Body".

2. (EWS) பொருளாதாரத்தால் பின்தங்கியவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் மனைகள் ஒருங்கிணைக்கவோ மாற்றி அமைக்கவோ கூடாது. ஆனால், கிராமப்புற பகுதிகளில் மனை ஒப்புதல் வழங்கப்பட்ட 3 வருடங்களுக்கு மேலாகியும் EWS மனைகள் விற்க இயலாத நிலை இருப்பின் அரசாணை எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.31.01.2020-ன்படி EWS மனைகளை ஒருங்கிணைப்பு செய்ய விண்ணப்பித்து உரிய அனுமதி பெறப்பட வேண்டும்.

3. பார்வை 11 மற்றும் 12-ல் கண்ட அரசு கடிதம் மற்றும் நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையின்படி உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய் ஆவணங்களில் உள்ளாட்சியின் பெயரில் உரிமை மாற்றம் செய்து வருவாய் ஆவணங்களில் சர்வே எண் உட்பிரிவு செய்யப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

4. "The Tamil Nadu Government in G.O. Ms. No. 112, Housing and Urban Development Department dated. 22.06.2017 has approved the Tamil Nadu Real Estate (Regulation & Development Act 2016). The Promoter has to advertise, market, book, sell or offer for sale, or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be in any Real Estate Project or part of it only after registering the Real Estate Project with the Real Estate Regulatory Authority"-ன்படி நடவடிக்கை தொடருமாறு மனுதாரரை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

5. பார்வை 7-ல் கண்டுள்ள அரசாணையின்படி திட்டமில்லா பகுதி/திட்டப்பகுதியில் அமையும் மனைப்பிரிவு எனில் விதி எண்.3-ன்படி சுவராய்வு கட்டணமாக ரூ. 1000/-ஐயும் மற்றும் விதி எண்.9-ன்படி இடத்தின் சந்தை மதிப்பில் 3% தொகையை நிலப்பயன் மாற்றக் கட்டணமாகவும் உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கும் முன் வசூல் செய்த பிறகே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

6. பார்வை 6 மற்றும் 10-ல் காண் அரசாணைகளின்படி மனைகளுக்கான நன்னிலை வரி மற்றும் இதர கட்டணங்கள், பார்வை 2-ல் காணும் 08.06.2022 நாளிட்ட இவ்வலுவலக கடிதத்தில் கோரப்பட்டு, பார்வை 5-ல் காணும் 08.06.2022 நாளிட்ட மனுதாரரின் கடிதத்தின் மூலம் பெறப்பட்டுள்ளது. மேலும், கொடிநாள் நிதியாக நன்னிலை வரி கட்டணத்தில் 20% தொகையை "Armed Force Flag Day Fund" என்ற பெயரில் Payable at Perambalur என

V. Kulanthaivelu.

தேசியமயமாக்கப்பட்ட வங்கயின் வரைவோலையும் பெறப்பட்டுள்ளது என்ற விபரம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

இணைப்பு:
(வரைபடம் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள்
( 2 தொகுப்பு மற்றும் அசல் தான பத்திரம்)

துணை இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
பெரம்பலூர் மாவட்டம்.

நகல்:

1. திரு வெ. குழந்தைவேல், க/பெ. வெள்ளைசாமி, பெருமாள் கோவில் தெரு, வேப்பந்தட்டை வட்டம், பெரம்பலூர் மாவட்டம். (பத்தி ஒன்று மட்டும்)
2. இருப்பு கோப்பு – (வரைபடம்–1 (ம) நிபந்தனைகள் படிவம்–1)
3. கோப்பு – (வரைபடம்–1 (ம) நிபந்தனைகள் படிவம்–1).
4. உதவி இயக்குநர் (நில அளவை), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், பெரம்பலூர் மாவட்டம். Tamil Nilam & Collabland Software உபயோகத்திற்காக.
5. Tamil Nadu Real Estate Regulatory Authority (TNRERA),
No.1A, 1st Floor,
Gandhi Irwin Bridge Road, Egmore,
Chennai – 600008.

தமிழ்நாடு அரசு

நகர் ஊரமைப்புத் துறை, பெரம்பலூர்

கோப்பு எண். 344/2022–பெ.மா. நாள்.16.06.2022

ம.வ./ந.ஊ.உ.இ.(பெ.மா.) எண்.10/2022

**மனைப்பிரிவு நிபந்தனைகள்**

1. நகர் ஊரமைப்புத் துறையால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக மனையின் அளவுகள், சாலைகளின் அமைப்புகள், அளவுகள், பொது ஒதுக்கீடு அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் மற்றும் மனையை மேலும் உட்பிரிவு செய்தல் ஆகியவற்றை எக்காரணத்தை முன்னிட்டும் நகர் ஊரமைப்பு துறையின் முன் ஒப்புதலின்றி செய்தல் கூடாது.
2. இரு சாலைகள் சந்திக்கும் இடத்தில் அமையும் மனைகளின் மூலைகள் அங்கீகரிக்ப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ள திருப்பத்தோடு (Splay) அமைக்கப்பட வேண்டும்.
3. மேற்குறிப்பிட்ட இரு நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கு முன்பு எந்த ஒரு மனையையும் விற்கவோ, குத்தகைக்கு விடவோ வேறு எந்த விதத்திலும் பரிமாற்றம் செய்யவோ அல்லது எந்த மனையிலும் கட்டடம் கட்டவோ கூடாது.
4. அங்கீகரிக்கப்பட்டுள்ள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள எந்த ஒரு மனையும் பொது காரணங்களுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள மனைகள் தவிர மற்ற மனைகளை குடியிருப்பு வீடு கட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். மேலும், மனை உபயோகம் மாற்றம் கோரும் இடங்களில் மட்டுமே TNCDBR–2019–ல் குறிப்பிட்டுள்ள Residential use–ல் குறிப்பிடப்பட்டுள்ளவைகளுக்கு மட்டுமே நகர் ஊரமைப்பு துறையின் முன் அனுமதி பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் அனுமதிக்கப்பட வேண்டும்.
5. மனையின் ஊடே குறைந்த அழுத்த / உயர் அழுத்த மின்கம்பிப் பாதை / தந்திக் கம்பிப் பாதை அமைந்தால், கம்பிப்பாதையை சாலையின் விளிம்பிற்கோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் காண்பித்துள்ளவாறோ மாற்றி அமைக்க வேண்டும்.
6. மனைப்பிரிவில் பள்ளமாக உள்ள பகுதியை தெரு மட்டத்திற்கு உயர்த்தப்பட வேண்டும்.
7. 7.2 மீட்டர் அகலத்திற்கு அதிகமாக உள்ள எல்லாத் தெருக்களிலும் நிழல் தரும் மரங்கள் எதிர்த்தாற்போல் அடுத்தடுத்து 9.00 மீட்டர்

V. Kalathian.

தூரத்திற்கு மேற்படாமல் சாலையின் எல்லையிலிருந்து 1.00 மீட்டருக்குள் வளர்க்கப்பட வேண்டும்.

8. மனுதாரர் மனைப்பிரிவுத் தொடர்புடைய தலைவர் / செயல் அலுவலர் / ஆணையாளர், ஊராட்சி / பேரூராட்சி / நகராட்சி –யில் ஒப்புதல் பெற்றுக் கொள்ள வேண்டும். மனைப்பிரிவில் அமையும் மனையில் கட்டடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டடத்திற்கும் நகர் ஊரமைப்புத் துறை மற்றும் உள்ளாட்சியிடமிருந்து அனுமதி பெற வேண்டும்.

9. அ. மேற்படி மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்புத் துறையால் திட்ட அனுமதி / இசைவு (Planning Permission / Concurrence) மட்டுமே வழங்கப்பட்டுள்ளது என்பதால், மனைப்பிரிவிற்கான இட உரிமைத் தொடர்பாக வில்லங்கம் ஏதேனும் இருப்பின் உள்ளாட்சியினரால் பரிசீலித்து முடிவு எடுக்கப்பட வேண்டும்.

ஆ. மேற்படி மனைப்பிரிவுக்கு உள்ளாட்சியால் அங்கீகாரம் அளிக்கப்படும்போது அங்கீகார நிர்வாக அதிகாரியின் முன்னிலை நடவடிக்கையின் நகலினை இவ்வலுவலகத்திற்கு உடன் அனுப்ப வேண்டும். இதில் பொது திறவிடங்கள் உள்ளாட்சியிடம் ஒப்படைத்ததற்கான சான்றும் இணைக்கப்பட வேண்டும்.

10. மனுதாரர், நகர் ஊரமைப்புத் துறையிடமிருந்து தலைவர் / செயல் அலுவலர் / ஆணையாளர், ஊராட்சி / பேரூராட்சி / நகராட்சி –யால் மனைப்பிரிவு வரைபடத்திற்கு ஒப்புதல் பெற்றவுடன் மனைப்பிரிவு ஒப்புதல் பெற்ற இடத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எவ்வித மாற்றம் / விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6' x 4' அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொது மக்கள் பார்வைக்காகவும் மேலும் மனைப்பிரிவு அங்கீகரித்த மன்ற தீர்மான எண்ணும், நாளும் தெளிவாக குறிப்பிட்டு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.

11. மனுதாரர் சமர்ப்பித்துள்ள நில உரிமை ஆவணங்களின்படி நில உரிமை குறித்து பரிசீலிக்கப்படுகிறது. எனவே, உண்மையில் நில உரிமை இல்லாத இடத்திற்கு மனைப்பிரிவு அங்கீகரிக்கப்பட்ட காரணத்திற்கு எந்த உரிமையும் கொண்டாட முடியாதெனவும் தெரிவிக்கப்படுகிறது.

12. நில உரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு Planning Permission / Concurrence ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட Planning Permission / Concurrence ஒப்புதல்

V. Kulandhai

எவ்வித முன்னறிவிப்புமின்றி நகர் ஊரமைப்பு துறையால் ரத்து செய்யப்படும்.

13. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும்போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத் துறையால் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

<u>அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவின் ஒதுக்கீடு விபரம்</u>

| விபரம் | | பரப்பளவு | விழுக்காடு |
|---|---|---|---|
| மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு | – | 6474.97 ச.மீ.<br>(அ) 1.60 ஏக்கர் | |
| ஒதுக்கிய மனைகள் | – | 28<br>எண்ணிக்கை | |
| <u>பொது ஒதுக்கீடு</u><br>மனுதாரர் உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டது. | | | |
| 1. உத்தேச சாலைகள் மற்றும் மூலை முடக்குகள் | – | 1534.95 ச.மீ. | |
| 2. பூங்கா | – | தொகை செலுத்தப்பட்டுள்ளது | |
| 3. உள்ளாட்சிக்கான ஒதுக்கீடு | – | 104.05 ச.மீ. | 2.11% |
| 4. தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கானது | – | 118.59 ச.மீ. | 2.40% |
| <u>விற்பனைக்குரியவை</u><br>EWS மனைகளின் பரப்பு | – | – | – |
| மனை எண்கள் | – | – | – |
| கடை | – | – | – |

V. Kulathasu.

16/6/2022

துணை இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
பெரம்பலூர் மாவட்டம்.

16/6 16/6/2022

**வேப்பந்தட்டை ஊராட்சி ஒன்றியம் , வேப்பந்தட்டை கிராம ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் செயல்முறைகள்**

**முன்னிலை : க.தனலட்சுமி**

அ.க.எண்.01/2022 நாள்:01/07/2022

பொருள்:

பெரம்பலூர் மாவட்டம் - வேப்பந்தட்டை ஊராட்சி ஒன்றியம் – வேப்பந்தட்டை வருவாய் கிராமம் - வேப்பந்தட்டை கிராமத்தில் கிராமப் புல எண்:172/10ஏ இல் 1.60 ஏக்கர் ____________ சென்ட் பரப்பளவு உள்ள இடத்தில் அமைந்துள்ள குடியிருப்பு மனை பிரிவு தொழில்நுட்ப ஒப்புதல் உத்தரவிடுதல்.

பார்வை:

1. உதவி இயக்குனர், நகர் மற்றும் ஊரமைப்பு துறை பெரம்பலூர் மண்டலம் பெரம்பலூர் - இன் கடிதம் ந.க.எண்: 344/2022 பெ.மா.நாள் : 16.06.2022

உத்தரவு:

பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை ஊராட்சி ஒன்றியம், வேப்பந்தட்டை ஊராட்சி, வேப்பந்தட்டை வருவாய் கிராமம், வேப்பந்தட்டை தெற்கு கிராமத்தில் புல எண்(கள்) 172/10ஏ இல் 1.60 ஏக்கர் பரப்பளவு கொண்ட நிலப்பகுதி புன்செய் என வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

V. Kulathai

இம்மனை பிரிவுகள் தொடர்பான அடிப்படை விவரங்கள் பின்வருமாறு தொகுக்கப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| 1 | மனைப்பிரிவின் மொத்த பரப்ப சதுர மீட்டரில் | 647.97 ச.மீ |
| 2 | மனைபிரிவில் மொத்த பரப்பு சதுர அடியில் | 647.97 ச.மீ |
| 3 | வரிசை எண் ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ள நிலப்பகுதி எத்தனை மனைகளாக பிரிக்கப்பட்டுள்ளன. | 28 மனைகள் |
| 4 | விற்கப்பட்ட மனைகளின் எண்ணிக்கை | - |
| 5 | விற்கப்படாத மனைகள் எண்ணிக்கை | 28 மனைகள் |
| 6 | ஏற்கனவே தனி அலுவலர் கிராம ஊராட்சியால் அங்கீகாரம் செய்த மனைகள் மற்றும் நாள் | - |
| 7 | தற்போது அங்கீகாரம் கூறும் மனைகள் | 28 மனைகள் |
| 8 | பூங்காவிற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிலப்பகுதி சதுர அடியில் | 500 ச.மீ |
| 9 | சாலை வசதிக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிலப்பகுதி (சதுர அடியில்) | 1534.95 ச.மீ |
| 10 | மொத்தமாக ஊராட்சிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள திறந்த வெளிப்பரப்பு (சதுர அடி) | 2034.95 |
| 11 | மனைப்பிரிவின் மொத்த நிலப்பகுதியில் 10 சதவிகிதம் ஊராட்சிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதா (ஆம்/இல்லை) | ஆம் |
| 12 | உதவி இயக்குனர் நகர் மற்றும் ஊரமைப்பு துறை பெரம்பலூர் மண்டலம் பெரம்பலூர் அவர்கள் அவர்களால் கணக்கிடப்பட்டுள்ள **3 %** | அரசு தலைப்பில் செலுத்தப்பட்டு சரான் பெறப்பட்டுள்ளது. தொகை ரு. 11055/- |
| 13 | வரிசை எண் 10-ல் குறிப்பிடப்பட்டுள்ள தொகை தனிநபராக செலுத்தப்பட்டுள்ள விவரம் கூராய்வு கட்டணம் | Village Panchyat Fund Veppanthattai என்ற பெயரில் 1000/- வங்கி வரைவாக பெறப்பட்டுள்ளது. |

V. Kulaithaivel

(83)

# வேப்பந்தட்டை ஊராட்சி ஒன்றியம்

## வேப்பந்தட்டை ஊராட்சி

| வ.எண் | மனை எண் | பரப்பளவு சதுர மீட்டர் | 3% | கூராய்வு கட்டணம் |
|---|---|---|---|---|
| 1 | 28 | 4445.78 | 11055/- | 1000/- |
| 2 | - | - | - | - |
| 3 | - | - | - | - |
| கூடுதல் | 28 | 4445.78 | 11055/- | 1000/- |

வேப்பந்தட்டை ஊராட்சி ஒன்றியம், வேப்பந்தட்டை ஊராட்சி மன்ற தலைவர் செயல்முறைகள் அ.க.எண்: 01 நாள்: 01/07/2022 வேப்பந்தட்டை கிராம புல எண் 1.60 ஏக்கர் பரப்பளவு கொண்ட குடியிருப்பு மனை பிரிவில் 1.60 ஏக்கர் பரப்பளவு கொண்ட மனைகள் 28 ஆகிய 28 மனைகளை ஒப்புதல் வழங்கி உத்தரவிடப்படுகிறது.

தலைவர்
வேப்பந்தட்டை ஊராட்சி

V. Kulathaiu.

எனவே, மேற்கண்ட விவரங்களின் அடிப்படையில் வேப்பந்தட்டை ஊராட்சி ஒன்றியம், வேப்பந்தட்டை ஊராட்சி, வேப்பந்தட்டை வருவாய் கிராமம், வேப்பந்தட்டை தெற்கு கிராமத்தில் புல எண்கள் 172/10ஏ பிரிக்கப்பட்டுள்ள 28 எண்ணிடப்பட்ட 28 எண்ணிக்கையிலான 4445.78 ச மீ பரப்பளவு கொண்ட மனைகளை பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஒப்புதல் வழங்கி உத்தரவிடப்படுகிறது

நிபந்தனைகள்

1. தற்போது கிராம ஊராட்சி தலைவரால் அளிக்கப்படும் அங்கீகாரம் பெரம்பலூர் நகர ஊரமைப்பு துணை இயக்குனர் கடிதத்தில் குறிப்பிடப்பட்டு குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளை அனுசரித்து வழங்கப்படுகிறது
2. இந்த அங்கீகாரம் காணும் செயல்முறை உடன் இணைத்து பெறப்பட்ட விரைப்படத்தின் அடிப்படையில் வழங்கப்படுகிறது.
3. தனித்தனி மனைப்பிரிவுகள் பிரிவுகளில் வீடு கட்ட அனுமதி கூறும் நிகழ்வுகளின் போது மேற்கொள்ளப்படும் தல ஆய்வின்போதோ அல்லது இடைப்பட்ட காலத்தில் மேற்கொள்ளக்கூடிய தலை ஆய்வுகளின்போதோ பத்தி எண் 4-ல் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளில் இருந்து வலுவுற்றதாக இருப்பது கண்டறியப்பட்டால் தற்பொழுது வழங்கப்பட்டுள்ள அங்கீகாரம் ரத்து செய்யப்படும்.
4. மேற்படியாக ஒப்புதல் செய்யப்பட்ட காலி வீட்டுமனைகளில் உரிமை தொடர்பாக வில்லங்கம் ஏதும் பின்னர் தெரிய வந்தால் வழங்கப்பட்ட அனுமதி ரத்து செய்ததாக கருதப்படும் எனவும் தனியாருக்கு தெரிவிக்கப்படுகிறது.
5. ஊராட்சி பெயரில் தானமாக அளிக்கப்பட்டுள்ள சொத்துக்கள் பற்றி ஆவணங்களை கொண்டு கிராம ஊராட்சியின் சொத்துக்கள் பதிவேட்டில் பதிவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். மேலும் பத்திரத்தின் நகல் ஒன்றும் கிராம ஊராட்சி அலுவலக பராமரிக்கப்பட வேண்டும்.

தலைவர்
வேப்பந்தட்டை ஊராட்சி

தலைவர்
வேப்பந்தட்டை ஊராட்சி

பெறுநர்

குழந்தை வேல்,
த/பெ வெள்ளையப்பன்,
வேப்பந்தட்டை,
PINCODE.621116

V. Kulathran.

## our services doesn't just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.

## empowering your real estate decisions with smart tools

### Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

### Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

### Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

### Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

### Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate